பளியரின் வரலாறு

பாகம் 1

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற ஐவகை நிலங்களில் ஐந்து வகையான மக்கள் வாழ்ந்து வந்தனர் இந்த ஐவகை நிலத்தில் மலையும் மலை சார்ந்த இடங்களில் வாழ்ந்த பழங்குடி பளியரின மக்களை பற்றி தெரிந்து கொள்வோம். தமிழ்நாட்டு மக்கள் தொகையில்3.5% பழங்குடி மக்கள் உள்ளனர். தமிழகத்தில் 40க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான பழங்குடி மக்கள் உள்ளனர். தமிழகத்தில் உள்ள ஏறக்குறைய 30 மாவட்டங்களிலும் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். காடர் இருளர் முதுவர் மாலைமலர் பளியர் குறும்பர் தோடர் என்று பல்வேறு வகைகளாக வகைப்படுத்தலாம். இந்த பழங்குடியின மக்களில் சிலருக்கு தனி தனி மொழிகள் இருக்கின்றன தனிமொழியாக அவை இருந்தாலும் இவர்களுடைய மொழிகள் அனைத்தும் தமிழுடன் தொடர்புடையதாக உள்ளது. இவர்களுடைய பாரம்பரியம் பண்பாடு கலாச்சாரம் ஆகிய அனைத்துமே ஒவ்வொரு பழங்குடியின மக்களுக்கு இடையே வேறுபட்டு காணப்படுகின்றன.



பளியரின் மக்கள்

இந்த பல்வேறு வகையான பழங்குடி மக்களில் ஒன்றுதான் இந்த பழங்குடி பளியரினம். இந்த பழங்குடி பளியரின மக்கள் குறிப்பாக மதுரை ராமநாதபுரம் திண்டுக்கல் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய மாவட்டங்களில் அதிகமாக இருக்கின்றனர். திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுமலை பழனி மலை குன்றுகளில் இந்த பளியரின மக்கள் பரவி வாழ்ந்து வருகின்றனர் மேற்குத் தொடர்ச்சி மலை ஒட்டி உள்ள பழனி மலையில் வாழ்ந்து வந்ததால் இவர்கள் முற்காலத்தில் பனையர் என்று அழைக்கப்பட்டனர். பின்னர் காலப்போக்கில்

இந்த பனையர் என்ற பெயர் மாரி பளியர் என்று இன்றுவரை அழைக்கப்பட்டு வருகிறது இவ்வாறாக பளியர் இனத்திற்கு இந்த பளியர் என்ற பெயர் வந்தது.



கற்குகை

தன்னுடைய கு
ழுவில் உள்ள அனைவருடைய ஆலோசனைகளையும் கேட்பார் பெண்களும் கூட தங்களுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு இந்த பலிகள் இடத்தில் முன்னுரிமை கொடுத்து தான் அவர்களுடைய கருத்துகளையும் கேட்டு முடிவு செய்வார்கள்.




மண் குகை

அதிகாலத்தில் வாழ்ந்த பழங்குடி பளியர் மக்களுடைய முக்கிய உணவு வேட்டையாடி சாப்பிடுவது தான் வேட்டையாட செல்லும் பொழுது ஆண்கள் மட்டும் வேட்டைக்கு செல்வார்கள் பெண்கள் அனைவரும் குகைகளிலே இருந்து தங்களுடைய குழந்தைகளை பார்த்துக் கொள்வார்கள். தம்முடைய குழந்தைகள் மட்டுமல்லாமல் அனைத்து குழந்தைகளுமே நம்முடைய குழந்தைகளாக எண்ணி எந்த வேற்றுமையும் இல்லாமல் அனைத்து பெண்களும் ஒன்று சேர்ந்து பார்த்துக் கொள்வார்கள்.



வேட்டையாடுதல்

அதிகாலத்தில் வாழ்ந்த பழங்குடி பளியறின மக்கள் காட்டுக்குள் செல்லும் பொழுது காட்டிலுள்ள வன தேவதைகளை எங்களுக்கு நீங்கள் தான் பாதுகாப்பு காட்டுக்குள் எங்களுக்கு எந்த ஒரு ஆபத்தும் ஏற்படாமல் நீங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று வன தேவதைகளை வேண்டிக் கொண்டுதான் காட்டிற்குள் செல்வார்கள். காடுகளுக்குள் வேட்டைக்குச் செல்லும் ஆண் பளியறின மக்கள் பொதுவாக மலைகளில் தான் வசித்து வந்தார்கள். மலைகளில் வசித்து வந்த காலகட்டங்களில் இவர்கள் எங்கு தங்கி தங்களுடைய உயிர்களை பாதுகாத்துக் கொண்டார்கள் என்று நம் பார்க்கும் பொழுது பளியரின மக்கள் மலைகளில் உள்ள பெரிய கற்குகைகளை தேர்வு செய்து கொண்டு அந்த கற்குகையில் தான் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள் மேலும் கற்குகை இல்லாத நேரங்களில் அவர்கள் மண் குகைகளிலும் வாழ்ந்து தங்களின் உயிர்களை பாதுகாத்துக் கொண்டனர். பளிருன மக்கள் பொதுவாக ஒரு குழுவாக தான் வாழ்ந்து வந்தனர். இந்த குழுவில் ஒரு தலைவர் இருப்பார் தலைவர்என்ன சொல்கிறாரோ அவற்றை கேட்டும் அவர் காட்டும் வழியில் தான் மற்ற அனைவரும் செல்வார்கள். அதற்காக தலைவர் மட்டும்தான் முடிவெடுப்பார் என்பது அர்த்தமுள்ள தலைவர்கள் அனைவரும் காட்டிற்குள் ஏதாவது சத்தம் கேட்கிறதா அது எந்த விலங்கினுடைய சத்தம் கேட்கிறது என்பதை உன்னிப்பாகவும் கூர்ந்து உற்று நோக்கியும் அவற்றை கவனித்து பார்ப்பார்கள். அவ்வாறு கூர்ந்து கவனிக்கும் போது தான் காட்டிற்குள் என்ன விலங்கு நமக்கு அருகில் இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள முடியும். அவ்வாறு உற்று நோக்கி கொண்டே செல்லும் பொழுது யானை போன்ற பெரிய விலங்குகள் வரும்பொழுது பளியரின பழங்குடியின மக்கள் என்ன செய்வார்கள் என்று பார்த்தால் எதிரே வரும் அந்த யானையிடம் அவர்கள் பேசுவார்கள். பழங்குடி மக்கள் யானையிடம் எவ்வாறு பேசுவார்கள் என்று கேட்டால் எங்களுடைய வயிற்றுப் பசிக்காக நாங்கள் காட்டிற்குள் உணவை தேடி வந்திருக்கிறோம் எங்கள் உணவிற்காக நாங்கள் ஒருபுறம் செல்கிறோம் நீ உன்னுடைய உணவைத் தேடி எங்களுடைய வழியை விட்டு விலகிச் செல் என்று கூறுவார்கள் அவர்கள் கூறும் இந்த வார்த்தையை கேட்டு யானையும் அவர்கள் செல்லும் வழியை விட்டு விலகிச் சென்று விடும்.



கற்களால் செய்யப்பட்ட ஆயுதங்கள்

இவ்வாறாக உணவை தேடி காட்டிற்குள் செல்லும் பளியரின மக்கள் காட்டுக்குள் கிடைக்கும் உணவு பொருட்களை எடுத்து வந்து அனைவரும் சமமாக பங்கிட்டு சாப்பிடுவார்கள் இப்போது இருக்கும் காலம் கட்ட மாதிரி ஒருவரே அனைத்தையும் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பளியரின மக்களிடையே கிடையாது. பளியர் இன மக்கள் தங்களுடைய தேவைக்கு ஏற்ப மட்டுமே தான் உணவை காட்டிலிருந்து எடுத்து வருவார்கள் உணவை அவர்கள் வீணாக்க மாட்டார்கள் மேலும் தண்ணீர் மற்றும் மரங்களை தேவையில்லாமல் அவர்கள் வெட்ட மாட்டார்கள் இவ்வாறு அவர்கள் இருந்த காரணத்தினால் தான் காட்டுக்குள் தூய்மையான காற்று இயற்கையான சூழலுடன் இணைந்து அவர்கள் எந்த ஒரு நோயும் இல்லாமல் வாழ்ந்து வந்தனர். மேலும் பளியருடைய இன்னும் பல வாழ்க்கை வரலாறுகளை பற்றி நாம் அடுத்த பாகத்தில் தொடர்ந்து பார்ப்போம்.

நன்றி.